# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

# Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

| | | |
|---|---|---|
| இஸ்லாம் சமயம் I<br>Islam I | Two Hours<br>Gr -13 (2021) | 44 T I |

### பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் முடிவுகளை ஆய்வின்றிப் பின்பற்றுவது
(1) இஜ்திஹாத் (2) தக்லீத் (3) இத்திபாஉ
(4) மக்ரூஹ் (5) முபாஹ்

02. ஒரு முஜ்தஹித் குழுவினர் குறித்த பிரச்சினை தொடர்பாக ஒரு கருத்தை முன்வைக்க அதனை வேறு எந்த முஜ்தஹித்களும் மறுக்காமலும் கருத்து வெளியிடாமலும் இருக்கும் நிலையில் தோன்றுவது
(1) இஜ்மா ஸரீஹ் (2) இஜ்மா சுகூதி (3) இஜ்மா அக்ஸரிய்யா
(4) இஜ்மா முரக்கப் (5) இஜ்மா கௌலி

03. நீர் வழிந்தோடும் இலங்கையின் இயற்கை வனப்பைக் கண்ட அரேபியர் அதற்கு ஒரு பெயர் சூட்டினர் அது
(1) ஸரந்தீப் (2) தப்ரபேன் (3) அஸ்ஸைலான்
(4) சிலோன் (5) அல்ஜெஸீரா

04. "யா அல்லாஹ் இவர்களில் யாரை அதிகம் நேசிக்கிறாயோ அவரைக் கொண்டு இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்வாயாக" என நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்தார்கள் இங்கு **இவர்களில்** எனக் குறிப்பிடப்படுவோர்
(1) அம்ரிப்னு ஆஸ்- காலித்திப்னு வலீத்
(2) அம்ரிப்னு ஹிஸாம் - உமரிப்னு கத்தாப்
(3) உமரிப்னு கத்தாப் - அம்ரிப்னு ஜஹ்ம்
(4) அம்ரிப்னு ஹிஸாம்- அம்ரிப்னு ஆஸ்
(5) உமரிப்னு அப்துல் அஸீஸ் - உமரிப்னு கத்தாப்

05. தர்தீப் திலாவத், தர்திப் நுஸுல் என்பன குறிப்பன முறையே அல்-குர் ஆன்
(1) அருளப்பட்ட முறையையும் ஓதப்படும் முறையையும் ஆகும்
(2) ஓதப்படும் முறையையும் அருளப்பட்ட முறையையும் ஆகும்
(3) அருளப்பட்ட முறையையும் எழுதப்பட்ட முறையையும் ஆகும்
(4) தொகுக்கப்பட்ட முறையையும் ஓதப்படும் முறையையும் ஆகும்
(5) ஒழுங்குபடுத்தப்பட்ட முறையையும் ஓதப்படும் முறையையும் ஆகும்

**06.– 10 வரையுள்ள வினாக்களில் உள்ள சொற்களில் இரண்டு சொற்கள் மற்றிரு சொற்களுடன் ஏதாவதொரு வகையில் தொடர்பினைக் கொண்டுள்ளன. அவ்வாறான தொடர்பினைக் கொண்டிராத எஞ்சிய சொல்லைத் தெரிவு செய்க.**

06. (1) அஸ்மா (றழி) (2) ஆயிஷா (றழி) (3) பாத்திமா (றழி)
(4) ஹஸன் (றழி) (5) ஹுஸைன் (றழி)

07. (1) பித்அத் (2) முஃதஸிலா (3) இஸ்னா அஸரிய்ய
(4) வாஜிப் (5) ஹராம்

08. (1) சூறா க.்.ப் (2) சூறா பாத்திஹா (3) சூறா பகரா
(4) சூறா பலக் (5) சூறா நாஸ்

09. (1) தஹாவி (2) ஷாபிஈ (3) ஹன்பலி
(4) ஹம்மாத் (5) நு.்.மான்

10. (1) .இப்றாஹீம்(அலை) (2) சுலைமான் (அலை) (3) யூசுப் (அலை)
(4) ஹாஜரா (அலை) (5) பல்கீஸ்

11. பின்வருவனவற்றுள் தவறான கூற்று
(1) "அல்இபாதத்" என்பது அல்லாஹ்வுக்காக அடியான் நிறைவேற்றும் வணக்கமாகும்
(2) "அத்தப்லீக்" என்பது றசூல்மார்களின் வாஜிபான ஸிபத்துக்களில் ஒன்றாகும்
(3) "அல்பதானத்" என்பது நபிமார்களுக்குரிய முஸ்தஹிலான ஸிபத்துக்களில் ஒன்றாகும்
(4) "அல்ஹையு" என்பது அல்லாஹ்வுக்குரிய வாஜிபான ஸிபத்துக்களில் ஒன்றாகும்
(5) "மு.்.ஜிஸாத்" என்பது நபிமார்கள் காண்பிக்கும் அற்புதங்களைக் குறிக்கும்.

12. றமழான் நோன்பினால் எதிர்பார்க்கப்படும் பயன்களில் பிரதானமானது
(1) உடல், உளக்கட்டுப்பாடு
(2) ஏழைகளின் கஷ்டங்களை உணர்தல்
(3) உலக முஸ்லிம்களின் ஐக்கியத்தை உணர்தல்
(4) விழித்திருந்து அமல் செய்தல்
(5) உடல் ஆரோக்கியம் பெறுதல்

13. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்பான முக்கிய தகவல்களைத் தரும் நூல்களாவன
(1) ஸஹீஹுல் புஹாரி – றியாழுஸ் ஸாலி ஹீன்
(2) அஜாஇபுல் ஹிந்த் - புதூஹுல் புல்தான்
(3) தாரீகுல் கபீர் - தாரிகுர் ருஸுல் வல் முலூக்
(4) கிதாபுல் உம்மு – அஹ்காமுஸ் சுல்தானியா
(5) புதூஹுல் புல்தான் - மிஸ்காதுல் மஸாபீஹ்

14. அல்-குர்ஆனின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பின்வருவனவற்றில் எதனை முதன்மைக் காரணியாகக் குறிப்பிடுவீர்
(1) அருளப்பட்ட காரத்திலேயே எழுத்திலும் மனனத்திலும் பாதுகாக்கப்பட்டமை
(2) அபூபக்கர் (றழி) அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்டமை
(3) உஸ்மான் (றழி) அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்டமை
(4) அல்குர்ஆன் முழுமையாக மனனமிடப்பட்டமை
(5) அல்குர்ஆனின் பாதுகாப்பை அல்லாஹ் உறுதிப்படுத்தியமை.

15. இஸ்லாமிய வரலாற்றில் பல சிந்தனைப்பிரிவுகள் தோற்றம் பெற்றன அவற்றுள் கவாரிஜ் எனப்படுவோர்
(1) அஹ்லுல் பைத்களை ஆதரிப்போர்
(2) கலீபா உஸ்மான் (றழி) மீது குற்றம் சுமத்தியோர்
(3) ஜமல் யுத்தத்தில் பங்கு கொண்டோர்
(4) அபூபக்கர் (றழி) அவர்களின் காலத்தில் மதம் மாறியோர்
(5) ஸிப்பீன் யுத்தத்தின் போது கருத்து முரண்பாடு கொண்டு அலி (றழி) அவர்களின் அணியிலிருந்து வெளியேறியோர்

16. கி.பி 16ம் நூற்றாண்டுகளில் கரையோரப் பகுதிகளில் செல்வாக்குடன் வாழ்ந்த முஸ்லிம்களைத் துரத்தியடித்தவர்
(1) ஆங்கிலேயர் (2) போர்த்துக்கேயர் (3) ஒல்லாந்தர்
(4) சிங்களவர் (5) பறங்கியர்

17. ஆன்மீக எழுச்சிக்குப் பங்களித்த இயக்கப்பிரிவினர்கள்
(1) காரிஜி, மு.்.தஸிலா, கதரிய்யா (2) அஷ்அரிய்யா, மாத்ரூதிய்யா, மு.்.தஸிலா
(3) காதிரிய்யபா, ஷாதுலிய்யா, ஜிஸ்திய்யா (4) அஷ்அரிய்யா, நக்ஸபந்திய்யா , தஹாவிய்யா
(5) சுஹ்ரவர்திய்யா, தஹாவிய்யா, ஜபரிய்யா

18. ஹஜ் - உம்ரா பற்றிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றுள் ஹஜ்ஜுடன் தொடர்பான கிரியைகளை விளக்கும் தொகுதி

A எந்த மாதத்திலும் நிறைவேற்றலாம்

B-அறபாவில் தரிக்க வேண்டும்

C தவாபு செய்தல்

D ஸஃயு இடம்பெறுதல் வேண்டும்

E குறிப்பிட்ட மாதத்தில் நிறைவேற்ற வேண்டும்

F மினா, முஸ்தலிபா கிரியைகள் இல்லை

G - இஹ்ராம் களையும் வரை துர்வார்த்தை பேசலாகாது

(1) BDFG (2) ABCD (3) CDEF

(4) BCDE (5) ADE

19. அபூபக்கர் (றழி) அவர்கள் தமது ஆட்சியில் மேற்கொண்ட நடவடிக்கைகளுள் அடங்காதது

(1) சகாத் கொடுக்க மறுத்தோருக்குகெதிரான போராட்டம்

(2) மஜ்லிஸுஷ் ஷூரா எனும் ஆலோசனை சபை உருவாக்கப்பட்டமை

(3) குர்ஆன் தொகுக்கப்பட்டமை

(4) நபியவர்கள் தயார் செய்து வைத்த உஸாமா (றழி) அவர்களது படையை சிரியாவுக்கு அனுப்பியமை

(5) மதம் மாறியோர், போலி நபிமார்களுக்கெதிரான முயற்சிகள்

20. அல்-குர்ஆனும் இஸ்லாமும் நபியவர்களது காலத்திலேயே தோற்றம் பெற்றது என்பதற்கும் அவர்களது காலத்திலேயே முழுமையாக்கப்பட்டுள்ளது என்பதற்கும் மிகவும் பொருத்தமான கூற்றாக அமைவது

(1) நபியவர்கள் இறுதித் தூதராகக் காணப்படுகின்றமை

(2) இவை பற்றிய அல்குர்ஆனின் கட்டளை

(3) இஸ்லாம் ஒரு சர்வதேச மார்க்கமாகக் காணப்படுகின்றமை

(4) இதுபற்றி ஹதீஸில் தெளிவு படுத்தப்படுகின்றமை

(5) முன்னைய வேதங்கள் திரிபுகளுக்கு உட்படுத்தப்பட்டமை.

**21 - 24 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் X, Y எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. X நிரலிலுள்ளவை Y நிரலிலுள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. Y நிரலிலுள்ளவற்றை X நிரலிலுள்ளவற்றுடன் சரியாகத் தொடர்புபடுத்தும் போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தைத் தெரிவு செய்க**

21.

| X | Y |
|---|---|
| 1. இமாம் இப்னு மாஜா | A. முஹம்மது இப்னு இஸ்மாயீல் |
| 2. இமாம் திர்மிதி | B. நைஸாபூரில் பிறந்தார் |
| 3. இமாம் முஸ்லிம் | C. பிக்ஹு அடிப்படையில் முதற்தரமானது |
| 4. இமாம் புஹாரி | D. பிறப்பு ஹிஜ்ரி 209 |
| 5. ஸுனன் அபூதாவூத் | E. வபாத் ஹிஜ்ரி 279 |

(1) ABDEC (2) CBEDA (3) DCABE

(4) DEBAC (5) DEABC

22.

| X | Y |
|---|---|
| 1. ஈமானுக்கும் அமலுக்கும் தொடர்பு கிடையாது | A. முஃதஸிலா |
| 2. அல்குர்ஆன் படைக்கப்பட்டது | B. ஷீஆ |
| 3. அலி (றழி) அவர்கள் சார்பானவர்கள் | C. முர்ஜிஆ |
| 4. ஷீஆக்களின் மிதவாதிகள் | D. அஷ்அரி |
| 5. அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் | E சைதிகள் |

(1) ABCDE (2) EDCBA (3) CAEDB

(4) CABED (5) EABCD

23. X Y

| X | Y |
|---|---|
| 1. மஹப்பத் | A. சுயவிசாரணை |
| 2. முஹாஸபா | B. பற்றற்ற வாழ்வு |
| 3. வர∴ | C நேசம் |
| 4. ஸுஹ்த் | D விசுவாசப்பிரமாணம் |
| 5. பைஅத் | E பேணுதல் |

(1) CABED (2) CAEBD (3) CBAED
(4) CBEAD (5) CEABD

24. X Y

| X | Y |
|---|---|
| 1. வாஜிபாத் | A. உலூஹிய்யாத் |
| 2. ருபீபிய்யாத் | B. வஹி கைரு மத்லூவ் |
| 3. ஷிர்க்குல் ஜலி | C. குப்ர் |
| 4. வஹி மத்லூவ் | D. முஸ்தஹீலாத் |
| 5. ஈமான் | E ஷிர்க்குல் கபீ |

(1) ACBED (2) ABCED (3) ECBAD
(4) AEBCD (5) DAEB

25. ஆன்மீக வாழ்வைப் பாதிக்கும் அம்சங்கள்
A. அல்ஹஸத்
B. அல்கித்ப்
C. அல்கத்ல்
D. தஸ்கியா
E. அல்கிப்ர்
(1) ABCD (2) ABDE (3) ACDE
(4) BCDE (5) ABCE

26. பின்வரும் விடயங்களில் காதியானிகளது கொள்கையில் இடம்பெறாதது
(1) வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பவர் மிர்ஸா குலாமே
(2) காதியானிகள் அல்லாத அனைவரும் நல்லெண்ணம் கொள்ளத்தக்கோராவர்
(3) வஹி அருளப்படுவது முற்றுப் பெறவில்லை
(4) இஸ்லாத்தில் ஜிஹாத் தொடர்ந்து நீடிப்பதில்லை
(5) கத்முன் நுபுவ்வத் என்பது நபித்துவ முத்திரையாகும்

27. அல்குர்ஆனின் வசனங்களுக்கு இ∴ராபுகளையும் ஒற்றை, இரட்டைப் புள்ளிகளையும் இட்டோரின் சரியான தொகுதி
(1) அபூஹுரைரா (றழி), அபூ தர்தா (றழி)
(2) ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப், யூசுப் ஜிஸ்லி
(3) அபுல் அஜ்வதுஸ் சௌரிய்யா, நஸ்ரிப்னு ஆசிம்
(4) சைதிப்னு ஸாபித் (றழி), அபுதர் அல்கிபாரி (றழி)
(5) அபுஅய்யூபில் அன்சாரி(றழி), அப்துல்லா இப்னு அப்பாஸ் (றழி)

28. தப்ஹீமுல் குர்ஆன் எனும் தப்ஸீரை எழுதிய ஆசிரியர்
(1) ஷஹீத் சையிதுல் குதுப் (2) இப்னு கதீர் (3) இமாம் ராஸி
(4) றஷீத் றிழா (5) அபுல் அ∴லா மௌதூதி

29. ஏனைய தொழுகைகளில் இடம்பெறாததும் கிரகணத் தொழுகையில் மாத்திரம் இடம்பெறுவதுமான அம்சம்
(1) குத்பாவும் தொழுகையுமாகும் (2) குத்பாவும் குனூத்துமாகும்
(3) 2 ரக்ஆத்களும் 4 ருகூஉகளுமாகும் (4) 12 தக்பீர்களும் 2 ரக்ஆத்களுமாகும்
(5) 4 தக்பீர்களும் ஜமாஅத் தொழுகையுமாகும்

30. இன்று இலங்கை முஸ்லிம் சமூகத்தில் விவாகரத்து அதிகரிப்பதற்கான பிரதான காரணம்
(1) இஸ்லாமிய குடும்ப வாழ்வு பற்றிய அறிவின்மை
(2) தலாக்கை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிகின்றமை
(3) வெளிநாட்டு வேலை வாய்ப்பு அதிகரித்து வருகின்றமை
(4) தொடர்பூடகங்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளமை.
(5) ஷரீஅத்தில் தலாக் அனுமதிக்கப்பட்டுள்ளமை.

31. வாழ்வு பற்றிய இஸ்லாத்தின் சிந்தனை மேற்கத்தய சிந்தனையிலிருந்து வேறுபடும் பாங்கு
(1) தௌஹீத் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டமை.
(2) பயன்பாட்டுவாதத்தை அடிப்படையாகக் கொண்டமை
(3) உலக வாழ்வை அடிப்டையாகக் கொண்டமை
(4) மறுபிறப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டமை
(5) துறவறக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டமை.

32. பெண்கள் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைக் குறிக்கும் கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான கூற்றுக்களை உள்ளடக்கிய சேர்மானத் தொகுதியைத் தெரிவு செய்க.
A. பெண்களுக்கான உரிமைகள் அல்குர்ஆன் அஸ்ஸுன்னா ஆகிய இரண்டின் மூலமும் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளன.
B. கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இத்தா காலம் 4 மாதங்களும் 10 நாட்களுமாகும்.
C. மனைவிக்குரிய நபகாவை வழங்குவது கணவனது கடமையாகும்.
D. மாதவிடாய் காலத்தில் தன்மனைவியை விவாகரத்து செய்வது தலாக் அல் பிதஈயில் அடங்கும்
E. குடும்ப விவகாரங்களில் தலைமைத்துவம் ஆண்களுக்குரியதாகும்
F. பெண்கள் வீட்டிற்கு வெளியே நடமாடும் போதும் வீட்டினுள்ளே இருக்கும் போதும் கடைப்பிடித்து வரவேண்டிய அவ்றத் வரையறைகள் ஒன்றேயாகும்.
G. ஒரு பெண் இமாமாக நின்று தொழுகை நடாத்தும் போது அவரைப் பின்தொடர்ந்து ஆண்கள் மஃமூம்களாகத் தொழமுடியும்.

(1) ABED (2) ACDE (3) ADFE
(4) CBAG (5) CDFG

33. தாம் வாழும் நாட்டின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்காகவும் உள்நாட்டு மோதல்களைத் தவிர்ப்பதற்காகவும் நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம்
(1) ஹுதைபியா உடன்படிக்கை (2) ஹில்புல் புழூல் உடன்படிக்கை
(3) மதீனா சாசனம் (4) முதலாம் அகபா உடன்படிக்கை
(5) இரண்டாம் அகபா உடன்படிக்கை

34. மரணித்த ஒருவரின் சொத்துத் தொடர்பாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளில் ஒழுங்கு முறையைக் காட்டும் தொகுதி
(1) ஜனாஸாவின் செலவினங்களை மேற்கொள்ளல், அவரது கடன்களை அடைத்தல், அவரது வஸியத்தை நிறைவேற்றல், வாரிசுகளிடையே சொத்துக்களைப் பங்கிடல்.
(2) அவரது கடன்களை அடைத்தல், வஸியத்தை நிறைவேற்றல், செலவினங்களை மேற்கொள்ளல், வாரிசுகளிடையே சொத்துக்களைப் பங்கிடல்
(3) வஸியத்தை நிறைவேற்றல், வாரிசுகளிடையே சொத்துக்களைப் பங்கிடல். ஜனாஸாவின் செலவினங்களை மேற்கொள்ளல், கடன்களை அடைத்தல்.
(4) கபனிடுதல், கடன்களை அடைத்தல். வஸியத்தை நிறைவேற்றல், தர்மம் செய்தல்
(5) கபனிடல், கடன்களை அடைத்தல் அடக்கம் செய்தல், தர்மம் செய்தல்.

35. தக்வாவை ஏற்படுத்தும் அமல்களில் ஒன்றாக அல்குர்ஆன் தெளிவாகக் குறிப்பிடும் ஓர் இபாதத்
(1) தர்மம் வழங்குதல் (2) தொழுகையை நிறைவேற்றல்
(3) நோன்பு நோற்றல் (4) பள்ளிவாசல்களை நிர்மாணித்தல்.
(5) கல்விக்கூடங்களை அமைத்தல்.

36. பக்தாதில் விண்வெளி ஆய்வு நிலையமொன்றை நிறுவிய வானியல் அறிஞர்
(1) சைத் இப்னு அலி (2) அல்குவாரிஸ்மி (3) அல்ஜாஹிஸ்
(4) இப்னு பிர்னாஸ் (5) இப்னு ஜௌசி

37. பௌதீக உலகத்தினாலும் ஐம்புலன்களினாலும் விளங்கிக் கொள்ளமுடியாத இஸ்லாமிய அகீதாவின் பிரிவுகளை விளக்கும் பகுதியை அழைப்பது
(1) அல்இலாஹிய்யா (2) அந்நுபுவ்வாத் (3) அர்ரூஹானிய்யா
(4) அஸ்ஸம்இய்யாத் (5) அர்ரிஸாலாத்

38. சவ்முல் கப்பாரா எனப்படுவது
(1) ஷஅபான் மாதத்தின் 15 வது நாள் நிறைவேற்றப்படும் நோன்பு
(2) ரமழான் மாதத்தின் 27 ம் திகதி நிறைவேற்றப்படும் நோன்பு
(3) நேர்ச்சைக்காக நிறைவேற்றப்படும் நோன்பு
(4) இபாதத்களின் போது விடுபட்ட தவறுகளுக்குத் தண்டனையாக நிறைவேற்றப்படும் நோன்பு
(5) ஷவ்வால் 6 நோன்புகள்

39. திம்மிக்கள் பற்றிய கூற்றுக்களின் சரியான தொகுதி
A. இஸ்லாமிய அரசுக்கு ஜிஸ்யா வரி செலுத்துதல்
B. இவர்களின் உரிமைகளை வழங்குவது இஸ்லாமிய அரசின் கடமை
C. திம்மிக்கள் இரத்தமும் முஸ்லிம்கள் இரத்தமும் சமமானது
D. அவர்கள் இஸ்லாமிய அரசுடன் போராடுவர்
E. அவர்களுக்கான நீதி உரிமையை இஸ்லாமிய அரசு புறக்கணிக்கும்
F. திம்மிக்கள் முஸ்லிம்களுடன் நல்லுறவு பாராட்ட வேண்டும்.
(1) ABCD (2) BCED (3) ABDE
(4) ABCF (5) CDEF

40. நஸ்ர் இப்னு ஆசிம் என்பவர் இஸ்லாமிய வரலாற்றில் சிறப்பிடம் பெறக்காரணமாக அமைந்தது.
(1) அல்குர்ஆன் வசனங்களுக்கு உயிர்க்குறிகளை இட்டமை
(2) ஹதீஸ்களை எழுத்துருவில் பாதுகாத்தமை
(3) அல் குர்ஆனைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டமை
(4) நபிகாலப் போர்களில் கலந்து கொண்டமை.
(5) அல்குர்ஆன் வசனங்களுக்கு ஒற்றை, இரட்டைப் புள்ளிகளை இட்டமை.

41. அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் இபாதத், இமாரத், கிலாபத் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றுள் கிலாபத் பணிகளை உள்ளடக்கிய தொகுதி
A. காடுகளை அழியாது பாதுகாத்தல்
B. இறைச்சட்டங்களை உலகில் நடைமுறைப்படுத்தல்
C. கடமைகளை நிறைவேற்றல்
D. மனித உரிமைகளை நிறைவேற்றல்
E. சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல்.
F. பெற்றோருக்குரிய கடமைகளை நிறைவேற்றல்
(1) AB (2) BD (3) BF
(4) CD (5) DE

42. கதரிய்யா, ஜபரிய்யா ஆகிய இரு பிரிவினர்களது சிந்தனைகளை உள்ளடக்கிய கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஜபரிய்யாக்களது சிந்தனையை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி
A. மனிதன் பூரண செயற்சுதந்திரமுள்ளவன்
B. மனிதன் சுயமாக சிந்தித்து எதனையும் செய்யமுடியாது
C. அல்லாஹ் நலவை மட்டும் நாடுகிறான்
D. மனிதனுடைய செயல்கள் அனைத்தையும் அல்லாஹ் படைக்கிறான்
E. மனிதனது இன்பம், துன்பம், உயர்வு, தாழ்வு என்பவற்றுக்கு அவனே காரணமாகிறான்
F. எல்லா செயல்களும் நடைபெற்று முடிந்ததன் பின்னரே அல்லாஹ் அறிகிறான்.
(1) BF (2) DF (3) AD
(4) BD (5) CE

- 43 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கான விடைகளை கீழ்வரும் அட்டவணையிலிருந்து தெரிவு செய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | முதலாம் கூற்றைத் தெளிவாக விளக்குகிறது |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 43. ஓராபி பாஷா எகிப்திலிருந்து நாடு கடத்தப்பட்டார் | ஓராபி பாஷாவின் தொடர்பு இஸ்லாமிய எழுச்சி இலங்கை முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றம் என்பவற்றுக்கு எம்.சி.சித்திலெப்பைக்குப் பெரிதும் துணை நின்றது. |
| 44. எமர் இப்னு அப்துல் அஸீஸ் (றஹ்) அவர்கள் கலீபதுஸ் ஸாலிஹ் என்று அழைக்கப்பட்டார்கள் | உமையாக்களது வீழ்ச்சிக்கு உமர் இப்னு அப்துல் அஸீஸ் காரணமாக இருந்துள்ளார் |
| 45. யஸீத் பின் முஆவியாவின் ஆதரவாளர்களினால் கர்பலாவில் ஹஸன் (றழி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள் | தனக்குப்பின்னர் கிலாபத்தை ஹுஸைன் (றழி) அவர்களிடம் ஒப்படைத்ததாக முஆவியா(றழி) அவர்கள் உறுதிப்படுத்தினார். |
| 46. மஃஸூம் எனும் பண்பு நபிமார்களுக்குரியது என அஹ்லுஸ்ஸுன்னா பிரிவினர் கூறுகின்றனர். | ஷீயாப் பிரிவினர் பிற்பட்ட காலப்பகுதியில் அரசியல் ரீதியாக எழுச்சி பெற்றனர். |
| 47. நெசவுத் தொழிலை வளர்க்க இந்தியாவிலிருந்து முஸ்லிம்களால் அழைத்து வரப்பட்டோர் இலங்கையில் அத்தொழிலை வளர்த்துள்ளனர் | போர்த்துக்கேயர் இலங்கையில் முஸ்லிம்கள் சுதந்திரத்துடன் செயற்பட ஆரம்பித்துள்ளனர் |
| 48. ஒருவர் மாதவிடாய் காலத்தில் தனது மனைவியை தலாக் சொல்வது தலாக் சுன்னி எனப்படும் | 3 தலாக்கையும் ஒரே தடவையில் கூற ஷரீஆ அனுமதித்துள்ளது. |
| 49. மணமகன் கைக்கூலி பெறுவது ஷரீஆவில் தடுக்கப்பட்டதன்று | வலீமா என்பது மணமகன் மணமகள் தரப்பினருக்கு வழங்குவதாகும் |
| 50. ஹதீஸ் குத்ஸியின் கருத்துக்கள் நபி (ஸல்) அவர்களால் குறிப்பிடப்பட்டவையாகும் | முதவாதிர் ஹதீஸ்கள் ஆஹாதைவிட தரம் கூடியவையாகும். |

(50x2=100 புள்ளிகள்)

# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

## Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

**இஸ்லாம் சமயம் II**
**Islam II**

**Three Hours** | **Gr -13 (2021)** | **44** | **T** | **II**


*(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)*

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – I

1. (1) யவ்முல் ஆகிரா என்றால் என்ன?
   (2) இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் உலக முடிவுக்கான அடையாளங்கள் 4 இனை முன்வைத்து அவற்றுள் 2 ஐ சுருக்கமாக விளக்குக.
   (3) மறுமை நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களுள் 6 அம்சங்களைக் குறிப்பிடுக.
   (4) கழா கத்ர் பற்றிய நம்பிக்கை மனித வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வதற்கு எவ்வாறு துணை புரிகின்றது என்பதை விளக்குக.

(2+4+6+8 புள்ளிகள்)

2. (1) பர்ளு ஐன், பர்ளு கிபாயா ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக.
   (2) தொழுகை, நோன்பு ஆகிய வணக்கங்கள் ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு நோக்கத்தைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
   (3) மனித வாழ்வின் அனைத்து செயற்பாடுகளும் இபாதத்தாக அமைவதற்கு அவசியமான நிபந்தனைகள் 4 இனைக் குறிப்பிட்டு அவற்றுள் 3 இனை விளக்குக.
   (4) சக்காத் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டும் 4 காரணங்களை முன்வைத்து அவற்றுள் 2 இனை நடைமுறை வாழ்வுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(2+4+6+8 புள்ளிகள்)

3. (1) ஷீஆ என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
   (2) ஷீஆ – அஹ்லுஸ்ஸுன்னா வேறுபாடுகள் இவ்விரண்டை முன்வைக்குக.
   (3) ஷீஆக்களின் பிரதான கொள்கைகள் 6 இனை முன்வைத்து அவற்றுள் 2 இனை விளக்குக.
   (4) அகீதாவில் முரண்பட்ட சிந்தனைகள் தோன்றுவதற்குரிய காரணிகள் 4 இனைக் குறிப்பிட்டு விளக்குக.

(2+4+6+8 புள்ளிகள்)

## பகுதி II

4. (1) இஸ்லாமிய சட்டக்கலையின் கருத்து வேற்றுமை தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் 5 இனை விளக்குக.
   (2) இஸ்லாமிய சட்டக்கலையின் பொற்காலம் என வர்ணிக்கப்டும் காலப்பிரிவு எது? இக்கால பிக்ஹ் கலை வளர்ச்சி பற்றி விளக்குக

(10+10 புள்ளிகள்)

5. பின்வருவன பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுதுக.
   1. இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்
   2. பைதுல் மால்
   3. மஸ்லஹா முர்ஸலா
   4. இலங்கையில் சுதந்திரத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பு

(5+5+5+5 புள்ளிகள்)

6. (1) இமாம் முஸ்லிம் (றஹ்) அவர்களது வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டு அவர்கள் ஹதீஸ்கலைக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குக.
   (2) கவாரிஜ் சிந்தனைப்பிரிவின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்கி அதன் பிரதான கோட்பாடுகளை விபரிக்குக.

(10+10 புள்ளிகள்)

7. (1) தொழுகையின் ஆன்மீக, லௌஹீகப் பயன்களை விளக்குக.
   (2) ஹஜ்ஜின் ஆன்மீக, லௌஹீகப் பயன்களை விளக்குக.

(10+10 புள்ளிகள்)

8. (1) இஸ்லாமியப் பொருளாதாரத்தின் நடைமுறை சார்ந்த அடிப்படைகள் 5 ஐ முன்வைத்து அவற்றை சுருக்கமாக விளக்குக.
   (2) குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அதற்கான இஸ்லாத்தின் தீர்வுகளை விளக்குக.

(10+10 புள்ளிகள்)